# நீர்வளச் சபை

## 1. நிதிக்கூற்றுக்கள்

------------------------

### 1.1 அபிப்பிராயம்

---------------------

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் நான் பெற்றுக் கொண்ட தகவல்களுக்கும் மற்றும் எனக்கு அளிக்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய, நீர்வளச் சபையானது 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உரிய பதிவேடுகள் முறையாகப் பேணப்பட்டிருந்தன எனவும், இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களால் நிதிக் கூற்றுக்களில் விளையும் தாக்கத்தைத் தவிர இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கும் அமைய நீர்வளச் சபையின் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைவரத்தையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் செயற்பாடுகளின் நிதிசார் விளைவுகளையும் காசுப்பாய்ச்சலையும் உண்மையாகவும் நேர்மையாகவும் காட்டும் வண்ணம் நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

-------------------------------------------------------------

#### 1.2.1 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

---------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

ரூபா 6,445,718 தொகையான கடன்பட்டோர்கள் தொடர்பாகவும் ரூபா 17,218,744 தொகையான கடன்கொடுத்தோர் தொடர்பாகவும் உறுதிப்படுத்தல்கள் சபையால் கோரப்பட்டிருக்கவில்லை.

**1.2.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

ஒவ்வொரு விடயங்களுக்கும் எதிரே காண்பிக்கப்பட்டுள்ள சான்றாதாரங்கள் இன்மையால் அவ்விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தன.

| | **கணக்குகளின் விபரம்** | **பெறுமதி** | **சமர்ப்பிக்கப்பட்டிராத சான்று** |
|---|---|---|---|
| | | **ரூபா** | |
| I | ஆதனங்கள், இயந்திர உபகரணங்கள் | 420,802,743 | நிலையான சொத்துப் பதிவேடு |
| II | நடைமுறை வேலை | 50,959,293 | |
| III | கிணறுகளின் சுத்திகரிப்பு (2009 உம் 2010 உம்) | 52,328,000 | உடன்படிக்கை, விபரமான வேலைத் திட்டம், முன்னோடி அறிக்கைகள் |
| IV | குழாய்க் கிணறு நிர்மாணிப்பு | 3,458,000 | செலவின விபரங்களும் முன்னொடி அறிக்கைகளும் |
| V | இடர் கடன்கள் | 5,496,114 | விபரப் பட்டோலைகள் |

**1.2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| | **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், என்பவற்றிற்கான தொடர்பு** | **இணங்காமைகள்** |
|---|---|---|
| (அ) | 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடை கொடுப்பனவு அதிகாரச்சட்டம் | பணிக்கொடை கொடுப்பனவிற்காக 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 58,544,345 தொகையான ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் எதிர்கால பணிக்கொடைக் கொடுப்பனவுகள் அவை ஏற்படும் வேளைகளில் எதிர்கொள்வதற்கு ஏதுவான வகையில் அவை வெளிவாரியாக முதலீடு செய்யப்பட்டிருக்கவில்லை. |

(ஆ) நிதிப்பிரமாணங்கள்

-------------------------

| | | |
|---|---|---|
| (i) | 104 (2), (3) (2) மற்றும் 110 | மோட்டார் வாகனங்களுக்கு ஏற்பட்ட சேதங்கள் தொடர்பான ஆரம்ப அறிக்கைகளும் இறுதி அறிக்கைகளும் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இழப்புப் பதிவேடும் தேவையானவகையில் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | இல. 272(2) | சகல கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களும் அவை தொடர்புபட்ட மாதத்தில் இருந்து ஆறு கிழமைகளிற்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். இத் தேவைப்பாடு இணங்கியிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (இ) | 2008 மே 28 ஆம் திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கை இல. 428 | சுற்றறிக்கையில் விதந்துரைக்கப்பட்டவாறு சில்லறைக் காசுக் கொடுப்பனவுகளின் வரையறை ரூபா 1,000 ஆகும். எவ்வாறெனினும், சபையால் இது இணங்கப்பட்டிருக்கவில்லை. |

(ஈ) திறைசேரிச் சுற்றறிக்கை

---------------------------------------

| | |
|---|---|
| 2002 நவம்பர் 28 இன் இல. ஐஏஜ/2002/02 | கணனிகளினதும், உதிரிப்பாகங்களினதும் பெறுமதியான ரூபா 4,327,908 தொகை இறுதிக் கணக்குகளின் நிலையான சொத்துக்களின் கீழ் உள்ளடக்கப்பட்டிருந்தது. சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் அச் சொத்துக்களுக்கு வேறான ஓர் நிலையான சொத்துப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (உ) | 2009 யூன் 09 இன் டீஎம்ஏ/2009(1) ஆம் இலக்க கணக்காய்வு மற்றும் முகாமைத்துவச் சுற்றறிக்கை | உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் சனவரி 31 ஆம் திகதிக்கு முன்னர் தயாரிக்கப்பட்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் இது சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) | 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | |
| | (i) 2.2.1(அ) ஆம் பிரிவு | பொது முயற்சிகளின் ஆண்டறிக்கைகள் குறித்த நேர வரையறைக்குள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். எவ்வாறெனினும், 2008, 2009 ஆம் 2010 ஆம் ஆண்டுகளின் போது இது இணங்கப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) 4.2.2 ஆம் பிரிவு | சபை, திட்டத்திற்கு ஏற்ப உள்ளபடியான செயற்பாடு உள்ளமையை உறுதிப்படுத்தி உரிய நேரத்தில் மாற்று நடவடிக்கை எடுப்பதற்காக கிரமமாக கூட்டுத்திட்டம், பாதீடு மற்றும் செயற்பாட்டினை மீளாய்வு செய்யவேண்டிய போதிலும் இத் தேவைப்பாடு 2010 இற்காக இணங்கியிருக்கவில்லை. |
| | (iii) 4.2.5 ஆம் பிரிவு | சபை அதன் தொழிற்படு மூலதன முகாமைத்துவத்தின் ஆக்கபூர்வமான நிர்வாகத்திற்காகவும், இருப்புக்களின் காலப்பகுப்பாய்விற்காகவும், காலாவதியான, குறைவான நகர்வுடைய, காலத்திற்கு ஏற்பாகாத ஏனைய விடயங்கள் மாதாந்த அடிப்படையில் தயாரிக்கப்பட வேண்டும். எனினும், சபை அத்தகைய கூற்றுக்களை தயாரித்து மீளாய்வு செய்திருக்கவில்லை. |

## 2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் மீளாய்வு

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், சபையின் 2010 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான தொழிற்பாடுகள் முன்னைய ஆண்டிற்கான 302,665 தொகையான மிகையுடன் ஒப்பிடுகையில் ரூபா 7,134,891 தொகையான மிகையை விளைவித்திருந்தமை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா 6,832,226 ஆல் மீளாய்வாண்டிற்கான மிகையில் ஓர் அதிகரிப்பைச் சுட்டிக்காட்டியது. நிதிசார் விளைவுகளின் அதிகரிப்பிற்கான முக்கிய காரணங்களாக செலவினத்தில் குறைவையும் வருமான அதிகரிப்பும் முறையே ரூபா 10,006,365 ஆகவும் ரூபா 6,174,139 ஆகவும் இருந்தமையும் அரசாங்க மானியம் ரூபா 3,000,000 தொகையால் அதிகரித்தமையைக் குறிப்பிடலாம்.

### 2.2 செயற்பாடு மீளாய்வு

#### 2.2.1 நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

வருடாந்தப் பாதீடு மற்றும் சபையிடமிருந்து கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் போதான சபையின் நிதி மற்றும் பௌதீகச் செயலாற்றல் கீழே தரப்படுகின்றன.

| நடவடிக்கைகள் | மதிப்பிடப்பட்ட செலவினம்/ வருமானம் | உள்ளபடியான செலவினம்/ வருமானம் | |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | % |
| நிலத்தடி நீர் ஆராய்ச்சி கற்கை | 25,100,000 | எதுவுமில்லை | - |
| நிலத்தடி நீர் அபிவிருத்தி | 12,100,000 | 17,463,509 | 144 |
| ஆராய்ச்சிக் கண்காணிப்பு மற்றும் பயிற்சி | 5,000,000 | 4,763,746 | 95 |

| | | | |
|---|---|---|---|
| நைதரசன் - ஆராய்ச்சி/ நிலத்தடி நீர் ஆராய்ச்சி | 152,470,000 | 41,668,586 | 27 |
| நீர் மாதிரிப் பகுப்பாய்வு | 2,310,000 | 497,325 | 21 |
| நீர் போத்தலில் அடைத்தலிலிருந்தான வருமானம் | 2,000,000 | எதுவுமில்லை | 0 |
| செயற்திட்டங்களின் அங்கீகாரமும் அனுமதிப்பத்திரங்களும் | 1,000,000 | எதுவுமில்லை | 0 |
| கமநல சேவை வருமானம் | 1,000,000 | எதுவுமில்லை | 0 |
| பதவியணிப் பயிற்சி | 500,000 | 218,100 | 43 |
| ஏனைய வருமானம் | 745,000 | 2,040,653 | 273 |

(ஆ) **பௌதீக செயலாற்றல்**

| **நடவடிக்கைகள்** | **மதிப்பீட்டு அலகுகள்** | **உள்ளபடியான அலகுகள்** |
|---|---|---|
| குழாய்க் கிணறுகள் துளையிடுதல் | 200 | 98 |
| சுத்திகரிப்பு ஆய்வுகள் | 200 | 148 |
| குழாய்க் கிணறுகள் சுத்திகரிப்பு | 200 | 50 |
| கையால் இயக்கும் குழாய் பொருத்துதல் | 125 | 58 |

| | | |
|---|---|---|
| காற்றாடி ஆலைகள் | 50 | 40 |
| கிணறு சுத்திகரிப்பு | 2,500 | 1,227 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) சபை நீர் போத்தலில் அடைத்தலிருந்ததான வருமானம், நிலத்தடி நீர் ஆராய்ச்சி கற்கை, செயற்திட்ட அங்கீகாரம் மற்றும் அனுமதிப்பத்திரங்கள் மற்றும் கமநல சேவை வருமானங்களுக்காக முறையே ரூபா 2,000,000, ரூபா 25,100,000, ரூபா 1,000,000 உம் ரூபா 1,000,000 தொகையுமான வருமானத்தை சபை மதிப்பிட்டிருந்தது. இருப்பினும், மீளாய்வாண்டின் போது மேற்குறித்த வளங்களின் மூலம் மதிப்பிட்ட வருமானத்தை சபை எய்தத் தவறியிருந்தது.

(ஆ) 2010 சனவரி 9 அன்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீட்டின் படி, சபை 200 குழாய் கிணறுகளையும் 200 சுகாதார ஆய்வுகளையும் மீளாய்வாண்டின் போது பூர்த்தி செய்வதற்கு மதிப்பிடப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், மீள்யர்வாண்டின் போது சபை 98 குழாய் கிணறுகளையும் 148 சுகாதார ஆய்வுகளை மாத்திரமே பூர்த்தி செய்திருந்தது. இதற்கு மேலதிகமாக சபை 50 குழாய்க் கிணறு சுத்திகரிப்புகளையும், 58 கை இயக்க பம்புகளையும் ஸ்தாபித்து, 40 பம்பிகளின் ஆய்வையும், 1,227 கிணறுகளின் சுத்திகரிப்பையும் மேற்கொண்டிருந்தது. இந் நடவடிக்கைகளில் இருந்தான செயற்பாடு எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளில் இருந்து 40 சதவீதம் முதல் 58 சதவீதம் வரையில் எய்தப்பட்டிருந்தது.

(இ) சபையால் தயாரிக்கப்பட்டிருந்த ஆரம்ப மதிப்பீட்டின் பிரகாரம், முல்லைத்தீவு, கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாண மாவட்டங்களில் யூனிசெப் இனால் நிதியிடப்பட்ட வடக்கு வசந்தம் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் எழுநூறு கிணறுகள் இறைக்கப்படுவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. ஏவ்வாறெனினும் சபையினால் 2010 மார்ச் 31 இல் உள்ளவாறு இரண்டாயிரத்துப் பதின்மூன்று கிணறுகள் இறைக்கப்பட்டிருந்தன. சபையால் கிணறுகள் இறைக்கப்படுவதற்காக ரூபா 52.3 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் அத் தொகையில் ரூபா 42.3 மில்லியன் தொகை நீர்ப்பாசன மற்றும் நீர் வழங்கல் முகாமைத்துவ அமைச்சினால் மீளாய்வாண்டின் இறுதியிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 2.3 முகாமைத்துவ திறமையீனங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) பழுதுபார்க்கப்படுவதற்காக 10 மோட்டார் வாகனங்கள் வேலைத்தளத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பழுதுபார்த்தல் வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அம் மோட்டார் வாகனங்களில் சில பழுதுபார்க்கப்படுவதற்கோ அல்லது கைதவிர்க்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படாது 04 ஆண்டு காலங்களுக்கு மேலாக தரிப்பிடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான கணக்குகளில் காண்பிக்கப்பட்ட ரூபா 7,251,998 தொகையான சபையின் வருமான நிலுவை அவை அறவிடப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படாது சபைப் பணிப்பாளர்களின் தீர்மானத்தில் மீளாய்வாண்டின் போது பதிவளிக்கப்பட்டிருந்தது.

(இ) கணக்காய்வுத் தெரிவுச் செவ்வைகளின் போது வருமானச் சேகரிப்புடன் தொடர்புபட்ட 19 கோவைகளின் வருமானச் சேகரிப்பு 1 முதல் 5 ஆண்டு காலமாக ரூபா 5,579,796 நிலுவையாக இருந்தமை கண்டறியப்பட்டது.

## 2.4 கூட்டுத் திட்டம் மற்றும் செயற்பாட்டுத் திட்டம்

சுபையால் 2010 ஆம் ஆண்டிற்காக கூட்டுத்திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் முறையாக வடிவமைக்கப்பட்ட கூட்டுத்திட்டத்தின் அடிப்படையில் மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

## 2.5 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு

(அ) 2010 திசெம்பர் 14 ஆம் திகதிய பீஈடீ/55 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் படி, மூன்று மாதங்களுக்கு ஒரு முறையேனும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூடப்பட வேண்டும். ஏவ்வாறெனினும் குழு 1 முறை மாத்திரமே கூடியிருந்தது.

(ஆ) சபையின் பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் 2010 யூலை 17 ஆம் திகதி தனது பதவியை இராஜினாமாச் செய்திருந்தார். எனினும் இப் பதவி மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நிரப்பப்படாதிருந்தது. பிரதிப் பணிப்பாளர் (நிதி) தனது வழமையான கடமைகளுக்கு மேலதிகமாக பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் கடமைகளையும் மேவுகின்றார். சபை விண்ணப்பங்களைக் கோரி ஓர் அறிவித்தலை 2010 திசெம்பர் 14 ஆம் திகதி பிரசுரித்திருந்த போதிலும் 2011 மார்ச் 31 இல் உள்ளவாறும் எந்தவித ஆட்சேர்ப்பும் இடம்பெற்றிருக்கவில்லை.

## 2.6 செயற்பாடற்ற வங்கிக் கணக்குகள்

ரூபா 12,096 கூட்டுத்தொகையான 2 வங்கிக்கணக்குகள் பல வருட காலமாக செயற்பாடற்றிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) நிதிசார் மற்றும் பௌதீகச் செயலாற்றல்

(ஆ) பாதீடு

(இ) கடன்பட்டோர் மற்றும் கடன் கொடுத்தோர்